கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் கோவிலூர் நால்ரோடு கடைவீதி பகுதியில் கோடை காலத்தில் மக்களின் தாகத்தினை தீர்க்கும் வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோடைகால தண்ணீர் பந்தலை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், சர்பத், தர்பூசணி வழங்கினார். நிகழ்வில் திருவரங்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, எம்.ஜி (எ) ராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

காங்கேயம் சாலை குள்ளாய்ப் பாளையத்தில் கட்டப்பட்டு வரும்

பாலத்திலிருந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 6 - திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம்காங்கேயம் சாலை, குள்ளாய்ப்பாளையம் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சூரியநல்லூர் கிராமம், சேர்வக்காரம்பாளையத்தைச் சேர்ந்த திரு. நாகராஜ் (வயது 44) த/பெ.குழுந்தான் என்பவர் தனது மனைவி திருமதி. ஆனந்தி (வயது 38) மற்றும் மகள் செல்வி. தீட்சையா (வயது 12) ஆகியோருடன் (3.5.2025) அன்று இரவு தனது இருசக்கர வாகனத்தை ஸ்டாண்டிலிருந்து எடுத்துக்கொண்டு வீட்டிற் குச் செல்லும் வழியில் தாராபுரம் - காங்கேயம் சாலை, குள்ளாய்பாளை யம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்த விபத்தில் நாகராஜ் மற்றும் திருமதி.ஆனந்தி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகர மான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து கோயம்புத்தூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செல்வி.தீக்ஷிதா என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செல்வி.தீக்ஷிதாவிற்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

மக்களின் ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்குகிறது,

அமுதா ஐ.ஏ.எஸ். தலைமையில் செயல்படும் 'முதல்வரின் முகவரி' துறை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் — சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மே 6 - "முதல்வரின் முகவரி துறை" குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், "அமுதா ஐ.ஏ.எஸ். அவர்களது தலைமையில் மக்களின் குறைகளைக் களைந்து - ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்குகிறது, 'முதல்வரின் முகவரி துறை' என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் வலைதளப்பதிவு வருமாறு:-

மக்களால் எளிதில் அணுகக்கூடிய எல்லோருடைய குறைகளையும் காது கொடுத்துக் கேட்டுத் தீர்வு காணக் கூடிய நமது திராவிட மாடல் அரசில், எனது நேரடிக் கட்டுப்பாட்டில், அமுதா இ.ஆ.ப., அவர்களது தலைமையில் மக்களின் குறை களைக் களைந்து ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்கு கிறது 'முதல்வரின் முகவரி துறை'!

பொதுமக்கள் இந்தத் திட்டத்தினைச் சிறப்புறப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு"

சேலம் கிழக்கு மாவட்டத்தில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், மே 6 - சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள்நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி, அரசின் ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க. எதேச்சாதிகாரப் போக்கிலிருந்து அரசியல் சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாதுகாக்கும் முதன்மையான மாநில அரசாகவும் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மக்களின் மகத்தான பேரன்பைப்பெற்ற முதலமைச்ச ராகவும் இந்தியாவிற்கே ரோல் மாடலாக தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் நல்லாட்சியின் "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு! சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் பின்வருமாறு ஒவ்வொரு நகர, ஒன்றிய கழகத்திலும் குறிப்பிட்டுள்ள தேதிகளில் நடைபெறவுள்ளது.

சேலம் கிழக்கு மாவட்டத்தில் வருகின்ற 08.0.52025 அன்று 1. பெத்த நாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றியம் தமையனூர் ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் பழ.செந்தாமரைக்கண்ணன் , 2.அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் மாசிநாயக்கன்பட்டி ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் இராசு. தமிழ்செல்வன், 3.தலைவாசல் வடக்கு ஒன்றியம் காட்டுகொட்டாய் ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் ஆர்.நரசிம்மன், வருகின்ற 09 .05.2025 அன்று 1. ஆத்தூர் ஒன்றியம் கொத்தாம்பாடி ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் பழ. செந்தாமரைக்கண்ணன் , 2, ஆத்தூர் நகரம் முல்லைவாடி பகுதியில் தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிக்கொண்டான் , 3. பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம் தாழ்வள்ளம் ஊராட்சியில் தலைமை கழக செய்தி தொடர்பு துணை தலைவர் பி.டி.அரசகுமார் , 4. தலைவாசல் மத்திய ஒன்றியம் சார்வாய்புதூர் ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் பாடகர் செ.மணி , 5.பனமரத்துப்பட்டி ஒன்றியம் அமாணி கொண்டலாம்பட்டி ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் இராசு தமிழ்செல்வன் , வருகின்ற 10.05.2025 அன்று 1. நரசிங்கபுரம் நகரம் பழைய ஹவுசிங்போர்டு மற்றும் கலைஞர் நகர் பகுதியில் தலைமை கழக செய்தி தொடர்பு துணை தலைவர் பி.டி.அரசகுமார் , 2. வாழப்பாடி வடக்கு ஒன்றியம் குறிச்சி ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் பழ. செந்தாமரைக் கண்ணன் மற்றும் இளம் பேச்சாளர் சூர்யபிரகாஷ் ,

3.தலைவாசல் தெற்கு ஒன்றியம் லத்துவாடி ஒன்றியம் கூடமலை ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் இராசு.தமிழ்செல்வன் மற்றும் இளம்பேச்சாளர் மருத்துவர்.திருமதி. எஸ்.திவ்யா , வருகின்ற 11.05.2025 அன்று 1.ஏற்காடு ஒன்றியம் மாரமங்கலம் மற்றும் வாழவந்தி ஊராட்சியில் தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் இளம்பேச்சாளர் ச.அஜித்குமார் . 2.வாழப்பாடி தெற்கு ஒன்றியம் பொன்னாரம்பட்டி ஊராட்சியில் தலைமை கழக செய்தி தொடர்பு துணை தலைவர் திரு.பி.டி.அரசகுமார் , 3. வீரபாண்டி பெருமாகவுண்டம்பட்டி ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் ஆர்.நரசிம்மன் , வருகின்ற 12.05.025 அன்று 1.பெத்தநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம் வெள்ளாளப்பட்டி ஊராட்சியில் தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிக்கொண்டான் , 2.அயோத்தியாப்பட்டணம் வடக்கு ஒன்றியம் மேட்டுப்பட்டி தாதனூர் ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் பழ. செந்தாமரைக்கண்ணன், 3.கெங்கவல்லி ஒன்றியம் ஊராட்சியில் அன்று தலைமை கழக பேச்சாளர் இராசு. தமிழ்ச்செல்வன் , 4. சேலம் தெற்கு ஒன்றியம் எருமாபாளையம் ஊராட்சியில் தலைமை கழக பேச்சாளர் பாடகர் செ.மணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் என அனைவரும் தவறாமல் அவர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கலந்து கொள்ள வேண்டும். கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நம் அரசின் நான்காண்டு சாதனையினை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் துண்டு பிரச்சூ ரங்கள் சுவரொட்டிகள் ஆகியவை தயார் செய்து நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் கூட்டத்திற்கு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து மாவட்ட கழகத்திற்கு தெரியப்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி நூற்றுக்கும் மேற்பட்டோர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், அவைத் தலைவர் நாகராஜ், உள்ளிட்ட ஏராளமானோர் உள்ளனர்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
06.05.2025 செவ்வாய்க்கிழமை	காலை 9.00 மணி	சிவகங்கை	ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

முன்னாள் அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை!

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், மே 6- விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழக செயற்குழு கூட்டம் எனது (மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி) தலைமையில் இன்று (06.05.2025 செவ்வாய்க் கிழமை) பிற்பகல் 2 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் , முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

சட்டப்பேரவை உறுப்பினர் - மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் அ.சிவா, மாவட்டக் கழக அவைத் தலைவர் - மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா.கற்பகம் , தலைமை கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் , பொதுக் குழு உறுப்பினர்கள் , ஒன்றிய - நகர - பேரூர் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

இக்கூட்டத்தில் கழக அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்துவது, கழக ஆக்கப் பணிகள் ஆகியவை குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, மே 6 - நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் இன்று (6.5.2025 செவ்வாய் கிழமை) காலை 10,00 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள். 1. 3.5.2025 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் படட தீர்மானங்கள் குறித்து.

2.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு என்.கௌதமன் அறிவித்துள்ளார்.

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் , முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற தலைப்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்திடவேண்டும் என்ற அறிவிப்புக்கிணங்க சேலம் மேற்கு மாவட்டதி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக் கூட்டங்கள் பின்வருமாறு நடைபெறும்.

தேதி	சட்டமன்ற தொகுதி கழக அமைப்பு	கழக பேச்சாளர்கள்
8.5.2025	சங்ககிரி மகுடஞ்சாவடி ஒன்றியம்	திரு.எஸ்.தர்மராஜன்
8.5.2025	மேட்டூர் மேச்சேரி ஒன்றியம்	திருமதி மு.சி.வித்யாபாரதி
9.5.2025	எடப்பாடி நங்கவள்ளி ஒன்றியம்	சி.செந்தில்குமார்
9.5.2025	சங்ககிரி தாரமங்கலம் மேற்கு ஒன்றியம்	திருமதி மு.சி.வித்யாபாரதி
9.5.2025	மேட்டூர் கொளத்தூர் ஒன்றியம்	வழக்கறிஞர் திரு.வி.வைத்தியலிங்கம்
10.5.2025	எடப்பாடி எடப்பாடி ஒன்றியம்	எஸ்.தர்மராஜன்
10.5.2025	சங்ககிரி சங்ககிரி ஒன்றியம்	சி.செந்தில்குமார்
10.5.2025	மேட்டூர் மேட்டூர் நகரம்	திருமதி மு.சி.வித்யாபாரதி ரா.கிருத்திகா
11.5.2025	எடப்பாடி கொங்கணாபுரம் ஒன்றியம்	எஸ்.தர்மராஜன்
11.5.2025	சங்ககிரி தாரமங்கலம் நகரம்	வழக்கறிஞர் திரு.வி.வைத்தியலிங்கம்
12.5.2025	எடப்பாடி எடப்பாடி நகரம்	சி.செந்தில்குமார்
12.5.2025	சங்ககிரி இடங்கணசாலை நகரம்	எஸ்.தர்மராஜன்

எனவே, இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளைக் கழக வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள் முந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA 2) பூத்கமிட்டி உறுப்பினர்கள்(BLC) கழகநிர்வாகிகள், கழகசெயல்வீரர்கள்மற்றும் பொதுமக்கள் பெறும் திரளாக கலந்து கொள்ள தேவையான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

டி.எம்.செல்வகணபதி
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்